# பிரான்ஸ் தேசிய சட்டமன்றத்தின் தலைவருடன் பிரதமர் சந்திப்பு

ஜூலை 14, 2023

பிரதம மந்திரி திரு நரேந்திர மோடி 14 ஜூலை 2023 அன்று, பிரெஞ்சு தேசிய சட்டமன்றத்தின் தலைவரும், சட்டமன்றத்தின் மூத்த தலைவருமான திருமதி யாயல் பிரவுன்-பிவெட் அவர்களை அவரது அதிகாரப்பூர்வ இல்லமான ஹோட்டல் டி லாசேயில் 2023 ஜூலை 14 அன்று மதிய உணவின் போது சந்தித்தார்.

ஜனநாயகம், சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் ஆகியவற்றின் பகிரப்பட்ட மதிப்புகளை இரு தலைவர்களும் எடுத்துரைத்தனர். இரு நாடாளுமன்றங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேலும் அதிகரிப்பதற்கான வழிகள் குறித்து அவர்கள் விவாதித்தனர்.

இந்தியாவின் பரந்த தேர்தல் செயல்முறைக்கு பிரான்ஸ் தரப்பு பாராட்டு தெரிவித்தது. வர்த்தகம் மற்றும் பொருளாதாரம், சுற்றுச்சூழல், தொழில்நுட்பம் மற்றும் கலாச்சாரம் உள்ளிட்ட மூலோபாய கூட்டாண்மையின் பல்வேறு தூண்களையும் விவாதங்கள் உள்ளடக்கியது. பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் அவர்கள் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர்.

**பாரிஸ்**
**ஜூலை 14, 2023**